226-1/49 KATCHI

[illegible] . [illegible] ([illegible] 1-25)

[illegible] X [illegible]

[illegible]

226-1

49

142

காட்சி

முதற்கிளை

இன்பம்.

க

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமையுடைத்து. காற்றும் இனிது.
தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.
ஞாயிறு நன்று. திங்களும் நன்று.
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.
கடல் இனிது. மலை இனிது. காடு நன்று.
ஆறுகள் இனியன. உலோகமும், மரமும், செடியும், கொடியும், மலரும்
காயும், கனியும் இனியன.
பறவைகள் இனிய. ஊர்வனவும் நல்லன. விலங்குகளெல்லாம் இனியவை.
நீர்வாழ்வனவும் நல்லன.
மனிதர் மிகவும் இனியர்.
ஆண் நன்று. பெண் இனிது.
குழந்தை இன்பம். இளமை இனிது. முதுமை நன்று.
உயிர் நன்று. சாதல் இனிது.

உ

உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன. உயிர் சுவையுடையது.
மனம் தேன். அறிவு தேன். உணர்வு அமுதம்.
உணர்வே அமுதம்.
உணர்வு தெய்வம்.

௩.

மனம் தெய்வம். சித்தம் தெய்வம், உயிர் தெய்வம்
காடு, மலை, அருவி, ஆறு,
கடல், நிலம், நீர், காற்று,
தீ, வான்,

ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள் — எல்லாம் தெய்வங்கள்.
உலோகங்கள், மரங்கள், செடிகள்,
விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீந்துவன,
மனிதர் — இவை அமுதங்கள்.

௪

இவ்வுலகம் ஒன்று.
ஆண், பெண், மனிதர், தேவர்,
பாம்பு, பறவை, காற்று, கடல்,
உயிர், இறப்பு — இவையனைத்தும் ஒன்றே.
ஞாயிறு, வீட்டுச்சுவர், ஈ, மலையருவி,
குழல், கோமேதகம் — இவ்வனைத்தும் ஒன்றே.
இன்பம், துன்பம், பாட்டு,
வண்ணான், குருவி,
மின்னல், பருத்தி — இஃதெல்லாம் ஒன்று.
மூடன், புலவன், இரும்பு, வெட்டுக்கிளி — இவை ஒரு பொருள்.
வேதம், கடல்மீன், புயற்காற்று, மல்லிகை மலர் — இவை ஒரு பொருளின் பல தோற்றம்.
உள்ளதெல்லாம் ஒரே பொருள். ஒன்று.
இந்த ஒன்றின் பெயர், "தான்" (ஆத்மா)
தானே தெய்வம்.
தான் அமுதம், இறவாதது.

௫.

எல்லா உயிரும் இன்பமெய்துக.
எல்லா உடலும் நோய் தீர்க.
எல்லா உணர்வும் ஒன்றாத லுணர்க.
"தான்" வாழ்க.
அமுதம் எப்போதும் இன்பமாகுக.

தெய்வங்களை வாழ்த்துகின்றோம்.

தெய்வங்கள் இன்ப மெய்துக. அவை வாழ்க.

அவை வெல்க.

தெய்வங்களே,

என்றும் விளங்குவீர், என்றும் இன்பமெய்துவீர்,

என்றும் வாழ்வீர், என்றும் அருள் புரிவீர், எவற்றையும் காப்பீர்.

உமக்கு நன்று.

தெய்வங்களே,

எம்மை உண்பீர், எமக்கு உணவாவீர்.

உலகத்தை உண்பீர், உலகத்துக்கு உணவாவீர்.

உமக்கு நன்று.

தெய்வங்களே,

காத்தல் இனிது, காக்கப்படுதலும் இனிது.

அழித்தல் நன்று. அழிக்கப்படுதலும் நன்று.

உண்பது நன்று. உண்ணப்படுதலும் நன்று.

சுவை நன்று, உயிர் நன்று. நன்று. நன்று.

௫.

உணர்வே, நீ வாழ்க. நீ ஒன்று. நீ ஒளி.

நீ ஒன்று. நீ பல.

நீ நட்பு. நீ பகை.

உள்ளதும் இல்லாததும் நீ.

அறிவதும் அறியாததும் நீ.

நன்றும், தீதும் நீ.

நீ அமுதம், நீ சுவை, நீ நன்று. நீ இன்பம்.

இரண்டாங் கிளை

புகழ்.

I

ஞாயிறு.

க

ஒளி தருவது யாது? தீராத இளமையுடையது யாது?

வெய்யவன் யாவன்? இன்பம் எவனுடையது?

மழை எவன் தருகின்றான்? கண் எவனுடையது?

உயிர் எவன் தருகின்றான்? புகழ் எவன் தருகின்றான்? புகழ் எவனுக்குரியது?

அறிவு எதுபோல் சுடரும்?

அறிவுத் தெய்வத்தின் கோயில் எது?

ஞாயிறு. அது நன்று.

ஞாயிறு

உ

நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி.

மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து — இவையெல்லாம் நினது திகழ்ச்சி.

கண் நினது வீடு.

புகழ், வீரம் — இவை நினது லீலை.

அறிவு நின் குறி. அறிவின் குறி நீ.

நீ சுடுகின்றாய், வாழ்க. நீ காட்டுகின்றாய், வாழ்க.

உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்,

வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய்,

நீர் தருகின்றாய், காற்றை வீசுகின்றாய், வாழ்க.

ஞாயிறு.

௩.

வைகறையின் செம்மை இனிது.

மலர்கள் போல நகைக்கும் உஷை வாழ்க.

உஷையை நாங்கள் தொழுகின்றோம்.

அவள் தீ.

அவள் விழிப்புத் தருகின்றாள், தெளிவு தருகின்றாள்,

உயிர் தருகின்றாள், ஊக்கந் தருகின்றாள்,

அழகு தருகின்றாள், கவிதை தருகின்றாள்,

அவள் வாழ்க.

அவள் தேன். சித்தவண்டு அவளை விரும்புகின்றது.

அவள் அமுதம்; அவள் இறப்பதில்லை.

வலிமையுடன் கலக்கின்றாள்

வலிமை அழகுடன் கலக்கும் இனிமை மிகவும் பெரிது.

வடமேருவிலே, பகலாகத் தொடர்ந்து வருவாள். வானமுலகைச் சூழ நகைத்துத் திரிவாள். அவளுடைய நகைப்புக்கள் வாழ்க.

தெற்கே நமக்கு விருத்தியாக வருகின்றாள். அன்பு மிகுதியால்.

ஒன்று பலவினும் இனிதன்றோ?

வைகறை நன்று. அதனை வாழ்த்துகின்றோம்.

ஞாயிறு

௧

நீ சுடுகின்றாய், நீ வருத்தந் தருகின்றாய்.

நீ வேர்வை தருகின்றாய், சோர்வு தருகின்றாய்

பசி தருகின்றாய். இவை இனியன.

நீ கடல் நீரை வற்றுவிக்கிறாய். இனிய மழை தருகின்றாய்.

வானவெளியிலே விளக்கேற்றுகிறாய்.

இருளைத் தின்று விடுகிறாய்.

நீ வாழ்க.

ஞாயிறு

௨

ஞாயிறே, இருளை என்ன செய்து விட்டாய்.

ஓட்டினாயா? கொன்றாயா? விழுங்கி விட்டாயா?

கட்டி முத்தமிட்டு நின் கதிர்களாகிய கைகளால் மறைத்து விட்டாயா?

இருள் நினக்குப் பகையா?

இருள் நின் உணவுப் பொருளா?

அது நின் காதலியா?

இரவெல்லாம் நின்னைக் காணாத மயக்கத்தால் இருண்டிருந்ததா? நின்னைக் கண்டவுடன் நின்னொளி தானும் பெற்று நின்னைக் கலந்து விட்டதா?

நீங்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளா?

முன்னும் பின்னுமாக வந்து உலகத்தைக் காக்கும்படி உங்கள் தாய் ஏவியிருக்கிறாளா?

உங்களுக்கு மணமுண்டா? நீங்கள் அமுதமா?

உங்களைப் புகழ்கின்றோம்.

ஞாயிறே, உன்னைப் புகழ்கின்றோம்.

ஞாயிறு.

6

ஒளியே, நீ யார்?

ஞாயிற்றின் மகளா?

அன்று. நீ ஞாயிற்றின் உயிர். அதன் தெய்வம்.

ஞாயிற்றினிடத்தே நின்னைத்தான் புகழ்கின்றோம்.

ஞாயிற்றின் வடிவம் உடல். நீ உயிர்.

ஒளியே, நீ எப்போது தோன்றினாய்?

நின்னை யாவர் படைத்தனர்?

ஒளியே, நீ யார்?

உனதியல்பு யாது?

நீ அறிவின் மகள் போலும். அறிவு தூங்கிக் கிடக்கும். தெளிவு போலும். அறிவின் உடல் போலும்?

ஒளியே, நினக்கு வானவெளி எத்தனை நாட்பழக்கம்?

உனக்கு அதனிடத்தே இவ்வளவு ~~[illegible]~~ அன்பு யாதுபற்றியது?

அதனுடன் நீ எப்படி இரண்டறக் கலக்கிறாய்?

உங்களையெல்லாம் படைத்தவன் வித்தைக்காரன். அவன் ~~[illegible]~~. கவிஞன், ரஸிகன். அவனைத் தொழுகின்றோம்,

ஒளியே, வாழ்க.

ஞாயிறு.

7.

ஞாயிறே,

நின்னிடத்து ஒளி எவ்வண்ணம் நிற்கின்றது?

நீ அதனை உமிழ்கின்றாயா?

அது நின்னைத் தின்னுகிறதா?

அன்றி, ஒளிதான் நீ வேறொன்று மில்லையா?

விளக்குத் திரி காற்றைக் குடிக்கின்றது.

காற்றுக்கும் சுடருக்கும் எவ்வகை உறவு?

காற்றின் வடிவே தீயென்றறிவோம்.

ஒளியின் வடிவே காற்றுப் போலும்.

ஒளியே, நீ இனியை.

ஞாயிறு.

8/

ஒளிக்கும் வெம்மைக்கும் எவ்வகை உறவு?

வெம்மை யேற ஒளி தோன்றும்.

வெம்மையைத் தொழுகின்றோம்.

வெம்மை ஒளியின் தாய். ஒளியின் முன்னுருவம்.

வெம்மையே, நீ தீ.

தீ தான் வீரத் தெய்வம்.

தீ தான் ஞாயிறு.

தீயின் இயல்பே ஒளி.

தீ வருக.

அதனிடத்தே நெய் பொழிகின்றோம்.

தீ வருக.

அதனிடத்தே தசை பொழிகின்றோம்.

தீ வருக.

அதனிடு வேள்வி செய்கின்றோம்.

தீ வருக.

தீ வருக.
அதனிடத்தே மனதை பொழிகின்றோம்

காமத்தீ, அறிவுத்தீ, [illegible]த்தீ, விளக்குத்தீ, வேள்வித்தீ, சினத்தீ, பசித்தீ, கொலைத்
தீ — இவையனைத்தையும் தொழுகின்றோம்.

இவற்றைப் புகழ்கின்றோம்.

இவற்றை ஓதுகின்றோம்.

தீயே, நீ எமது உயிரின் தோழன்.

உன்னை வாழ்த்துகின்றோம்.

நின்னைப் போல, எமதுயிர் நூறாண்டு வெம்மையும் சுடரும் தருக.

தீயே, நின்னைப் போல, எமதுள்ளம் சுடர்விடுக.

தீயே, நின்னைப் போல, எமதறிவு கனலுக.

ஞாயிற்றினிடத்தே, தீயே, நின்னைத் தான் போற்றுகின்றோம்.

ஞாயிற்றுத் தெய்வமே, நின்னைப் புகழ்கின்றோம்.

நினதொளி நன்று. நினது செயல் நன்று. நீ நன்று.

ஞாயிறு.

1.

வானவெளி என்னும் பெண்ணை ஒளியென்னும் தேன் மயக்குகின்றது.

அவளுடைய மனம் இனிது.

இதனைக் காற்றுத் தேவன் கண்டான்.

காற்று வலிமையுடையவன்.

இவன் வானவெளியைக் கலக்க விரும்பினான்.

ஒளியை விரும்புவது போல வானவெளி இவனை விரும்பவில்லை.

இவன் தனது பெருமையை ஊதிப் பறையடிக்கின்றான்.

வெளியும் ஒளியும் இரண்டு உயிர்கள் கலப்பது போலக் கலந்தன.

காற்றுத் தேவன் பொறாமை கொண்டான்.

அவன் அமைதியின்றி உழலுகிறான்.

அவன் சீறுகின்றான், புடைக்கின்றான், குமுறுகின்றான்;
ஓலமிடுகிறான், சுழலுகின்றான், துடிக்கின்றான்;
ஓடுகின்றான், எழுகின்றான், நிலையின்றிக் கலக்குகிறான்.

வெளியும் ஒளியும் மோனத்திலே கலந்து நகை செய்கின்றன.

காற்றுத் தேவன் வலிமையுடையவன்.
அவன் புகழ் பெரிது. அவனுக்கு நன்று.
ஆறுகள் வானவெளியும் ஒளியும் அவனியும் நிற்கின்றன.
அவை வேதத்திலே கூறாத நேர்த்தியுடையன.
அவை பெருந்தன்மையுடையன.
ஞாயிறே, நீ தான் ஒளித்தெய்வம்.
நின்னையே வெள்ளென நின்று காத்து நிற்கின்றோம்.
உன்கண் காணாப் பிறக்கின்றது.
நீ வாழ்க.

ஞாயிறு.

10.

ஞாயிறே, நின் முகத்தைப் பார்த்த பொருளெல்லாம் ஒளி பெறுகின்றன.
புவி, சந்திரன், செவ்வாய், புதன், ~~[illegible]~~ சனி, வெள்ளி, வியாழன், யுரேனஸ்,
நெப்த்யூன், முதலிய பல நூறு வீடுகள் — இவையெல்லாம் நின் கதிர்கள் பட்ட
மாத்திரத்திலே ஒளியுற நகைசெய்கின்றன.
தீப்பற்றியவுடன் பொருள்கள் எரிவதுபோல, இவையெல்லாம் ஞாயிற்றிலிருந்து
பெற்று வெளிப்பட்டன வென்பர்.
இவற்றைக் கலம் என்றும் கிரகம் மதிப்பர்.
இவை ஒளி குன்றிப் போயின.
ஒளி மழுங்கினவல்ல. குறைந்த ஒளியுடையன.
ஒளியற்ற பொருள் உலகத்திலே யில்லை.
இருளென்பது குறைந்த ஒளி.
செவ்வாய், புதன் முதலிய பெண்கள் ஞாயிற்றை வலம்வருகின்றன.
இவை தமது தந்தையின் மீது காதல் செலுத்துகின்றன.
அவன் சந்நிதியிலே கூடிநின்று வளைந்து வளைந்து ஆடுகின்றன.
அவனுடைய சக்தி வெள்ளத்தை ~~எப்போதும்~~ என்றும் பருகி மகிழ்வன.
அவன் எப்போதும் இவற்றை நோக்கி மகிழ்கின்றான்.
அவனுடைய ஒளியமுதத்திலே உலகம் முழுதும் நனையும் பொருட்டாக

இலை வருகின்றன.

அவனுடைய இலை மலரும் கிளியும், காற்றிலும் பறந்துவரத் தக்கனவும்.

ஞாயிறு மிகச் சிறந்த தேவன். அவன் ஜகத்துக்கெல்லாம் உயர்ந்தோன்,

அவனாலே மலர் மலருகின்றது.

இலைகள் அவனுடைய அருகிலே போகமெய்தியிருக்கின்றன.

அவனால் நீரும் நிலமும் காற்றும் உயிர்த்து களியுறும்.

அவனால் வான் கவின்கொள்ளும்.

அவனுக்கு மற்றெல்லாத் தேவரும் பணிசெய்வர்.

அவன் புகழைப் பாடுவோம்.

அவன் புகழ் இனிது.

ஞாயிறு 4.

புலவர்களே, அறிவுப் பொருள்களே, உயிர்களே,

பூதங்களே, சக்திகளே, எல்லோரும் வருவீர்.

ஞாயிற்றைத் துதிபுரிவோம் வாருங்கள்.

அவன் நமக்கெல்லாம் தலைவன்.

அவன் மழை தருகின்றான்.

மழை நன்று.

மழைத் தெய்வத்தை வாழ்த்துகின்றோம்.

ஞாயிறு வந்தது காய்கிறான்.

அவன் நீரைக் காய்ச்சி மேலே கொண்டு போகிறான்.

அதனை மீளவும் கீழ்க்கொணர காற்றை ஏவுகின்றான்.

மழை இனிமையுறப் பெய்கின்றது.

மழை பாடுகின்றது.

அது பலகோடித் தந்திகளுடையதோர் இசைக்கருவி.

வானத்திலிருந்து அமுத-வயிரக் கோல்கள் விழுகின்றன.

பூமிப்பெண் விடாய் தீர்கிறாள். குளிர்ச்சி பெறுகின்றாள்.

வெப்பத்தால் தண்மையும், தண்மையால் வெப்பமும் விளைகின்றன.

அனைத்தும் ஒன்றேயாம்.

வெப்பம் தவம். தண்மை யோகம்
வெப்பம் ஆண். தண்மை பெண்
வெப்பம் வலியது. தண்மை இனிது.
ஆணினும் பெண் சிறந்ததன்றோ?
நாம் வெம்மையைத் தெய்வமென்று புகழ்கின்றோம்.
அது வாழ்க.

ஞாயிறு. 12.

நாம் வெம்மையைப் புகழ்கின்றோம்.
வெம்மைத் தெய்வமே, ஞாயிறே, ஒளிக்குன்றே,
அமுதமாகிய உயிரின் உலகமாகிய உடலில் மீன்களாகத் தோன்றும் விழிகளின் நாயகமே,
பூமியாகிய பெண்ணின் தந்தையாகிய காதலே,
வலிமையின் ஊற்றே, ஒளி மழையே, உயிர்க்கடலே,
சிவனென்னும் வேடன் சக்தியென்னும் குறத்தியை உலகமென்னும் புனம் காக்கச் சொல்லி வைத்து விட்டுப் போன விளக்கே,
கண்ணனென்னும் கள்வன் அறிவென்னும் தன் முகத்தை மறைத்திடும் ஒளியெனும் திரையே,
ஞாயிறே, நின்னைப் பரவுகின்றோம்.
மழையும் நின் மகள், மண்ணும் நின் மகள்
காற்றும் கடலும் கனலும் நின் மக்கள்
வெளி நின் காதலி,
இடியும் மின்னலும் நினது வேடிக்கை,
நீ தேவர்க்குத் தலைவன்.
நின்னைப் புகழ்கின்றோம்.
தேவர்களெல்லாம் ஒன்றே.
காண்பன வெல்லாம் அவளே.
கேட்பன அவளே.
அவர்களுடைய தாய் அதிதி.

அறிவே தெய்வம். அறிவே மெய்யொளி.

அஃது அமுதம்.

அதனைப் புகழ்கின்றோம்.

அதன் விளக்கமாகிய ஞாயிற்றைப் புகழ்கின்றோம்.

ஞாயிற்றின் புகழ் பேசுதல் கவிதை.

ஞாயிறு 13

மழை பெய்கிறது. — காற்றடிக்கின்றது. இடி இடிக்கின்றது. மின்னல் வெட்டுகின்றது.

புலவர்களே, மின்னலைப் பாடுவோம் வாருங்கள்.

மின்னல் ஒளித்தெய்வத்தின் ஒரு லீலை — ஒளித்தெய்வத்தின் ஒரு தோற்றம்.

அதனை யவனர் வணங்கி ஒளி பெற்றனர்.

மின்னலைத் தொழுகின்றோம்.

அது நம்மறிவை ஒளியுறச் செய்க.

மேகக் குழந்தைகள் மின்னற் பூச் சூடுகின்றன.

மின் ~~[illegible]~~

மின்னற் தெய்வவல்லமை அல்லவோ.

கருங்கல்லிலே, வெள்ளை மணலிலே, பச்சை இலையிலே

செம்மணிலே, நீல மேகத்திலே,

காற்றிலே, மலையிலே — எங்கும் மின்சக்தி உறங்கிக் கிடக்கின்றது.

அதனைப் போற்றுகின்றோம்.

நமது விழிகளிலே மின்னல் பிறந்திடுக.

நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப் பாய்க.

நமது வலக்கையிலே மின்னல் தோன்றுக.

நமது பாட்டு மின்னலுடைத்தாகுக.

நமது வாக்கு மின்போல அடித்திடுக.

மின் வெள்ளைத் தெய்வம்.

வல்லதிலே வன்மை சேர்க்கும்.

அது நம் வல்லமையை வளர்த்திடுக.

ஒளியை, மின்னலை, சுடரை, மணியை,

ஞாயிற்றை, திங்களை, வானத்து வீடுகளை, மீன்களை — ஒளியுடைய அனைத்தையும் வாழ்த்துகின்றோம்.

அனைத்தையும் வாழ்த்துகின்றோம்.

ஞாயிற்றை வாழ்த்துகின்றோம்.

சக்தி.

1.

சக்தி வெள்ளத்திலே ஞாயிறு ~~[illegible]~~ ஒரு குமிழி.
சக்திப் பொய்கையிலே ஞாயிறு ஒரு மலர்.
சக்தி அனந்தம் — எல்லையற்றது, முடிவற்றது.
அசையாமையில் அசைவு காட்டுவது.
சக்தி அடிப்பது, தகர்ப்பது, கட்டுவது,
பிணைப்பது, கலப்பது, உதறுவது,
புடைப்பது, வீசுவது, சுழற்றுவது,
கூட்டுவது, பிரிப்பது, தாழ்த்துவது,
உயர்த்துவது, நிறுத்துவது, ஓட்டுவது,
ஒன்றாக்குவது, பலவாக்குவது.
சக்தி ஒளிக் கொள்வது, அயர்வு தருவது, சுறுசுறுப்புத் தருவது,
தூக்கம் தருவது, சோர்வு தருவது, சோர்வு நீக்குவது,
இயல்பு தருவது, இயல்பு மாற்றுவது,
சோம்பல் தருவது, ஊக்கந் தருவது, எழுச்சி தருவது,
கிளர்ச்சி தருவது, மடிவிப்பது, புன்னகை செய்வது.
கொல்வது, உயிர் தருவது.
சக்தி மகிழ்ச்சி தருவது, சினந் தருவது
வெறுப்புத் தருவது, உவப்புத் தருவது,
பகைமை தருவது, காதல் மூட்டுவது,
உறுதி தருவது, அச்சம் தருவது,
பொறுப்புத் தருவது, ஆற்றுவது.
சக்தி முகர்வது, சுவைப்பது, தீண்டுவது, கேட்பது, காண்பது.
சக்தி நினைப்பது, ஆராய்வது, கணிப்பது, தீர்மானஞ் செய்வது,
கனாக் காண்பது, கற்பனை புரிவது, தெளிவது, ஐயுறுவது,
பற்றி நிற்பது, எண்ணமிடுவது, மதிப்பிடுவது,
சக்தி மயக்கந் தருவது, தெளிவு தருவது.

[illegible], [illegible], ஊட்டுதல், வளர்த்தல்,

பாதுகாத்தல், [illegible], ஒளிசெய்தல் —

[illegible] நமக்கு மஹாசக்தி அருள்புரிக.

அன்புநீர் பாய்ச்சி அறிவென்னும் ஏருழுது,

[illegible] களை போக்கி பொறுமையால் காத்து,

இன்பப் பயனைத் துய்ப்பதற்கு மஹாசக்தியின் துணை வேண்டுகின்றோம்.

அதனை அவள் தருக.

சக்தி.

௩.

இருள் வந்தது. ஆந்தைகள் மகிழ்ந்தன.

வீட்டிலே கணவனைக் [illegible] ஒரு பெண் [illegible] [illegible] புலம்பினாள்.

ஒளி வந்தது; கணவன் வந்தான். பெண் மகிழ்ந்தாள்.

[illegible], [illegible].

[illegible], [illegible].

[illegible], [illegible].

ஐயம் கொல்லும். அதனை ஞானம் கொல்லும்.

அஸத்யம் கொல்லும். அதனை ஸத்யம் கொல்லும்.

நாம் அச்சம் கொண்டோம். தாய் அதை நீக்கி உறுதி தந்தாள்.

நாம் துயர் கொண்டோம். தாய் அதை மாற்றிக் களிப்புத் தந்தாள்.

குனிந்த தலையை நிமிர்த்தினள்.

சோர்ந்த விழியில் ஒளி சேர்த்தாள்.

கலங்கிய நெஞ்சிலே தெளிவு வைத்தாள்.

இருண்ட மதியிலே ஒளி கொடுத்தாள்.

மஹாசக்தி வாழ்க.

சக்தி.

௪

"மண்ணிலே வேலி போடலாம்.

வானத்திலே வேலி போடலாமோ?" என்றொரு பழமொழியுண்டு.

உள்ளத்தைக் கட்டலாம். சக்தியைக் கட்டலாமா?
உடலைக் கட்டலாம். உயிரைக் கட்டலாமா?
எண்ணத்திலே சக்தி எதையுமறியும் உள்ளத்திலும் நிற்கின்றாள்.
சக்திக்கு அற்புதமான கோயில்கள் வேண்டும்.
தொடக்கமும் முடிவுமில்லாத காலத்திலே நிற்கின்றோளும் அழகுக்கே புதிய கோயில்கள் வேண்டும்.
இந்த அற்புதமான கோயில்களிலே இறைவிக்கு "மாதா" என்று பெயர்.
இதனை ஓயாமல் புதுப்பித்துக் கொண்டிருப்பவள் சக்தி இவளேயாவாள்.
இது பழமைப்பட்டுப் போகாமல் இதை வைப்பவள்.
இப்போது அவள் என்னுள்ளே நிறைந்திருக்கிறாள்.
இப்போது எனதுயிரிலே வேகமும் திறமையும் பொருந்தியிருக்கின்றன.
இப்போது எனதுடலிலே சுகமும் வலிமையும் அமைந்திருக்கின்றன.
இப்போது என்னுள்ளத்திலே தெளிவு நிலவுகின்றது.
இது எனக்குப் போதும்.
"வென்றது சக்தி" பாடுவோம். "மாதாக் கோயிலு" திறக்க" பாடுவோம்.
இப்போது என்னுள்ளே சக்தி கொலு வீற்றிருக்கின்றாள்.
அவள் நீடு வாழ்க.
அவளைப் போற்றுகின்றோம், புகழ்கின்றோம், வாயார வாழ்த்துகின்றோம்.

சக்தி
௫

"மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே வேலி போடலாமா?"
போடலாம்.
மண்ணிலும் வானத்திலே நிறம் பரவுகின்றது?
பொறிகளைக் கட்டுமிடம் அறிவுள்ள வானத்தைக் கட்டுதலாகாதோ?
உடலைக் கட்டு. உயிரைக் கட்டுவாய்.
உயிரைக் கட்டு. உள்ளத்தைக் கட்டுவாய்.
உள்ளத்தைக் கட்டு. சக்தியைக் கட்டுவாய்.
அதற்குச் சக்தியைப் பணிவுடனே வேண்டுமின்.
என்றுமே ஏதும் தீமையில்லை கொடுப்பாள்.

அதற்கு ஒரு வடிவம், ஒழுங்கு, ஒரு நியமம் ஏற்படுகின்றது.
இந்த நியமத்தை அறியாதபடி சக்தி பின்னே நின்று காத்துக் கொண்டிருக்கின்றது.

மனிதஜாதி இனிமேலும் இதே நியமத்தை அழிவெய்தாதபடி காக்கலாம்; அதனை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டிருந்தால், அந்த "வடிவத்திலே" சக்தி நிலைத்து நிற்கும்.

புதுப்பிக்காவிட்டால் அவ் "வடிவம்" மாறும்.

அழுக்குத் துணியை, கிழிந்த துணியை, பழைய துணியை, — அதிலுள்ள பணத்தையெடுத்துப் புதிய துணியிலே போடு. மேற்றுணியைக் கந்தையென்று வெளியே எறி. அந்த "வடிவம்" அழிந்து விடும்.

வடிவத்தைக் காத்தால் சக்தியைக் காக்கலாம்.

அதாவது, சக்தியை அவ்வடிவத்திலே காக்கலாம்.

வடிவம் மாறினும் சக்தி மாறுவதில்லை.

எங்கும், எதனிலும், எப்போதும், எல்லாவிதத் தொழில்களும் காட்டுவது சக்தி.

வடிவத்தைக் காப்பது நன்று; சக்தியின் பொருட்டாக.

சக்தியைப் போற்றுதல் நன்று: வடிவத்தைக் காக்குமாறு.

ஆனால் வடிவத்தை மாத்திரம் போற்றுவோர் சக்தியை இழந்து விடுவர்.

சக்தி

6.

பாம்புப் பிடாரன் குழலூதுகின்றான்.

"இனிய இசை சோகமுடையது" என்பது கேட்டிருக்கிறோம்.

ஆனால், இப்பிடாரன் ஊதும் இசை மிகவும் இனியதாயினும் சோகரஸந் தவிர்ந்தது.

இஃதோர் மண்புழுத் துடிப்பது போலிருக்கின்றது.

ஒரு நாவலன் பொருள் நிறைந்த சிறிய சிறிய வாக்கியங்களை அடுக்கிக் கொண்டு பேசுவது போலிருக்கிறது.

இந்தப் பிடாரன் என்ன பாடுகிறான்?

"தானதந்தத் தானதந்தத் தான தனத்
தானதந்தன தானதந்தன தான
தந்தனத்தன தந்தனத்தன தான"

இவ்வுருவைப் பலவகைகளில் வாழ்த்தி அவள் அருளை வாழ்த்துகின்றேன்
வேண்டுகிறேன். இதற்குப் பொருளென்ன?

ஒரு புலவன் இதற்குப் பின்வருமாறு பொருள் சொல்லுகிறான்—

"காளிக்குப் பூச்சூட்டினோம் அவளைத்
தொழுது போற்றி நின்றனரே."

பராசக்தியின் பொருட்டே இவ்வுடல் கட்டினோம்.

அதைப் பலத்துடன் விளங்கும் தேகம் நிலைபெறுக.

பராசக்தியைச் சரணடைந்தோம்.

நோய் மறைந்து விட்டது.

பராசக்தி ஒளி போல் என் அகத்திலே விளங்குகின்றாள்.

அவள் வாழ்க.

சக்தி
7

பாம்புப் பிடாரன் குழலூதுகின்றான்.

குழலிலே இசை பிறந்ததா? தொளையிலே பிறந்ததா?

பாம்புப் பிடாரன் மூச்சிலே பிறந்ததா?

அவனுள்ளத்திலே பிறந்தது. குழலிலே வெளிப்பட்டது.

உள்ளம் தனியே ஒலிக்காது. குழல் தனியே இசை புரியாது. உள்ளம் தொளையிலே
ஒட்டாது.

உள்ளம் மூச்சிலே ஒட்டும். மூச்சு குழலிலே ஒட்டும்.

குழல் பாடும்.

இது சக்தியின் லீலை.

அவள் உள்ளத்திலே பாடுகிறாள். அது குழலின் தொளையிலே கேட்கிறது.

பொருந்தாத பொருள்களைப் பொருத்தி வைத்து அதிலே இசை

யுண்டாக்குதல் — சக்தி

தும்பை மலர்களின் வெண்மையிலே சிரிக்கின்றாள்.

மனிதன் இதயம், தும்பைச் செடிகள் — இவையும் யார்? சக்தி வேறு வடிவம்? சக்தி.

"ஞானம் வேணும்; ஞானம்!" என்றொருவன் கத்திக் கொண்டு போகிறான்.

அதே அறிவியல்.

ஆ! பொருள் கொண்டு விளைவோம்.

மனிதன் உயிரும், தும்பைச் செடிகளின் உயிரும், பூனைக் குட்டியின் உயிரும் ஒரே சக்தி விளையாடுகின்றது.

உடல் பல. பரன் ஒன்றே.

தோற்றம் பல. சக்தி ஒன்று

அது வாழ்க.

சக்தி

2.

பராசக்தியைப் பாடுகின்றோம்.

இவள் எப்படி உண்டாயினள்? — அது தான் தெரியவில்லை.

இவள் தானே முதல் தாய்; "தான்" என்ற பரம்பொருளின் சக்தி.

இவள் ~~[illegible]~~ எதிலிருந்து தோன்றினள்? "தான்" என்ற பரம்பொருளிலிருந்து.

எப்படித் தோன்றினள்? தெரியாது.

படைப்பு இயற்கை கண்ணுக்குத் தெரியாது. அறிவுக்கும் தெரியாது. ✗

சிறு இயற்கை கண்ணுக்குத் தெரியும். அறிவுக்குத் தெரியாது.

வாழ்க்கை இயற்கை கண்ணுக்குத் தெரியும். அறிவுக்கும் தெரியும்.

வாழ்க்கையாவது சக்தியைப் போற்றுதல்; இதன் பயன் இன்பமெய்துதல்

உள்ளம் தெளிவுறுக; உயிர் ஒளிர்க; மனம் உறுதியடைக; உடல் அமைதியும் வலிமையும் பெறுக. மகாசக்தியின் அருள் பெறுதலே வாழ்தல்.

அதை வாழ்கின்றோம்.

எங்கள் வாழ்வுக்கு வேண்டிய மகாசக்தியை மீண்டும் வாழ்த்துகின்றோம்.

காற்று.

20

1.

ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல். ஓலைப் பந்தல். தென்னோலை.
குறுக்கும் நெடுக்குமாக ஏழெட்டு மூங்கில் - கழிகளை சாதாரணக் கயிற்றால்
கட்டி மேலே தென்னங் கிடுகுகளை விரித்திருக்கிறது.
ஒரு மூங்கிற் கழியிலே கொஞ்சம் மிச்சக் கயிறு தொங்குகிறது.
ஒரு சாண் கயிறு.
இந்தக் கயிறு ஒரு நாள் சுகமாக ஊசலாடிக் கொண்டிருந்தது.
பார்த்தால் துளிகூடக் கவலை யிருப்பதாகத் தெரியவில்லை.
சில சமயங்களில் அசையாமல் "உம்" மென்றிருக்கும். கூப்பிட்டால் கூட
ஏனென்று கேட்காது.
இன்று அப்படியில்லை. 'குஷால்' வழியிலிருந்தது.
எனக்கும் இந்தக் கயிற்றுக்கும் சிநேகம். நாங்கள் அடிக்கடி வார்த்தை
சொல்லிக் கொள்வதுண்டு.
"கயிற்றினிடத்தில் பேசினால் அது மறுமொழி சொல்லுமா?"
பேசிப்பார், மறுமொழி கிடைக்கிறதா இல்லையா என்பதை.
ஆனால் அது சந்தோஷமாக இருக்கும் சமயம் பார்த்து வார்த்தை
சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், முகத்தைத் தூக்கிக் கொண்டு சும்மா
இருந்து விடும். பெண்களைப் போல.
எது எப்படியிருந்தாலும், இந்த வீட்டுக் கயிறு பேசும். அதில்
சந்தேகமே யில்லை.
ஒரு கயிறு சொன்னேன்? இரண்டு கயிறுண்டு.
ஒன்று ஒரு சாண். மற்றொன்று முக்கால் சாண்.
ஒன்று ஆண். மற்றொன்று பெண். கணவனும், மனைவியும்.
அவை, யிரண்டும் ஒன்~~றை~~றை யொன்று காதல் பார்வைகள் பார்த்துக் கொண்டும்,
புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டும், வேடிக்கைப் பேச்சுப் பேசிக் கொண்டும்
ரஸப் போக்கிலே யிருந்தன.
அத்தருணத்திலே நான் போய்ச் சேர்ந்தேன்.
ஆண் கயிற்றுக்குக் "கந்தன்" என்று பெயர்.
பெண் கயிற்றுக்குப் பெயர் "வள்ளியம்மை"

(பளிங்குக்கல் போன்ற தரைக்கு நீரோடைகளுக்குமேல் வெள்ளை வைக்கலாம்.)

கிந்தன் வள்ளியம்மை மீது மாங்காயை போட வருகிறது. வள்ளியம்மை திரும்பி பார்க்கிறது. அந்த சந்தர்ப்பத்திலே நான் போய்ச் சேர்ந்தேன்.

"என்ன, கிந்தா, வேலைக்காரி ஆச்சு? ஒருவேளை, நான் சந்தர்ப்பந் தவறி வந்து விட்டேனோ, என்னவோ? போய் வருகிறேன் வரட்டுமா?" என்று கேட்டேன்.

அதற்குக் கிந்தன் :- "அட போடா, வைதிக மனுஷன்! உன் வேலை [illegible] எழுந்தையா? என்னடி, வள்ளி, இது [illegible] இவர் பார்த்ததிலே உனக்குக் கோபமா?" என்றது.

"சரி, சரி, என்னிடத்தில் ஒன்றும் கேட்க வேண்டாம்" என்றது வள்ளியம்மை.

அதற்குக் கிந்தன் கடகட வென்று சிரித்துக் கையைத் தூக்கி நான் பக்கத்தி வருகிறேன் போட்டு வள்ளியம்மையைக் கட்டிக் கொண்டது.

வள்ளியம்மை கீச்சுக் கீச்சென்று கத்தலாயிற்று. அதன் மனதுக்குள்ளே வள்ளியம்மைக்கு சந்தோஷம். நான் அந்த வேளையும் பார்த்ததிலே நமக்கு சந்தோஷந் தானே?

இந்த வேடிக்கை பார்ப்பதிலே எனக்கும் மிகவும் திருப்தி தான். உண்மையில் வெள்ளி வரவேற்பிலே என்ன இருக்கும்? இளமையின் வசந்தம் கொண்டாட்டம் [illegible] இருப்பதன்றோ?

வள்ளியம்மை அதிகக் கூச்சமடைய, கிந்தன் அதை விட்டு விட்டது.

சில நிமிஷங்களுக்குப் பின், மறுபடி போய்த் தழுவிக் கொண்டது.

மறுபடியும் கூச்சல், மறுபடியும் விடுதல் ~~விடுதல்~~; மறுபடியும் ~~[illegible]~~ ~~[illegible]~~ மறுபடியும் கூச்சல் இப்படியாக நடந்து கொண்டே வந்தது.

"என்ன கிந்தா சந்தர்ப்பத்தில் ஒரு வார்த்தை கூடச் சொல்ல மாட்டேன் என்கிறாயே! வேடிக்கை மட்டும் நடக்கிறது. போகட்டுமா?" என்றேன்.

"அட போடா! வைதிகம்! வேடிக்கை தானே பார்த்துக் கொண்டிருக்கிறாய். இன்னும் சிறிது நேரம் நின்று கொண்டிரு. இவளைப் பிடித்தால் [illegible] இருக்க வேண்டிப் பழக்கிறது. இப்பொழுது நீயும் நானும் சில விஷயங்கள் பேசலாம் நிற்கிறாய். போய் விடாதே. இரு" என்றது.

நின்று பேச்சேயும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் கழித்துதான், பொன்னும் இளம் மயக்கத்திலே நான் நின்றதை மறந்து தலைநிமிர்ந்து விட்டு விட்டது.

உடனே பட்டு. ஜொலித்துமான நக்ஷத்திரங்கள். ஒரு பக்கம் ஒரு வெள்ளை மேகம். சிரித்தோ 'அவைகள்?'. அவ்வளவு நாள் [வளர்ந்து வருகிற] பார்த்தும் இது வரைத்தான் மகிழ்ச்சி மகிழ்ச்சி தான் — கேள்வியுமா!

சற்றுநேரம் என்னையுமறந்து தெரியாமல் விழித்து நின்று பார்த்துக்கொண்டே இருந்தேன். அப்போது வள்ளியம்மை தாமதமே போய்க் காத்திருந்தேன். அது ஏதோ சொல்ல வரும். இது ஒரே. கேள்வியுமா!

இவ்வளவு நேரம் பொறுத்து கொண்டிருந்த வள்ளியம்மைக்கு கோபம் வந்தது.

நான் பக்கத்து வீட்டிலே தாத்தாவுக்கு ஆகும் வேலைகளெல்லாம் வேலை ஏன். போனதை அப்படியே கண்டவுடன் கேள்விகள் விட்டு ~~—~~

நான் நினைப்பதை பார்த்தபோது வள்ளியம்மை தூங்கிக் கொண்டிருந்தது. கத்தர் என்னுடைய எதிரே நோக்கி வந்தது.

என்னைக் கண்டதும், "எங்கே போயிருந்தாய், சாமி! சொல்லாமல் போயிருந்து போய் விட்டாயே" என்றது.

"அம்மா, என்ன நிலைமை போகிறது?" என்று கேட்டேன்.

ஆஹா! அந்த இருட்டிலே கண்ணுக்கு தெரிந்து வெளிச்சத்தில் என் முகமே நின்ற தேவதையை மகிமையை என்னென்று சொல்வேன்! [காற்றும் தேவன் தோன்றினான்.] அவளுடன் விம்மி விம்மி அழுதபடி இருக்கும் நின்றிருந்தேன்.

பார்வதி போல் ஒளிவீசுபவளாக இருந்தது.

"மலரே வானமே தனிமையே மறந்துவிடும் புதுமையானவளே."

காற்றே, பொறு. நீயே கண்கண்ட பரம்.

அவள் தோன்றிய பொழுதிலே வானமே நட்சத்திரம் நிலாவும் கண்விழித்துக் கொண்டிருந்தது.

ஆனந்தமே அந்தப் பெண் வணங்கினோம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

காற்று.

3.

காற்றுக்கு உரு இல்லை.

[illegible]

[illegible]

[illegible]

அவன் சொன்னான்.

[illegible]?

[illegible]

[illegible]?

[illegible]?

[illegible]

காற்று

4

[illegible]

[illegible]

[illegible]

மரு தேசம்.
அவ்வனத்தின் வழியே, ஒட்டைகளின் மீதேறி ஒரு வியாபாரக் கூட்டத்தார் போகிறார்கள்.
வாயு சண்டனாகி வந்துவிட்டான்.
பாலை வனத்து மணலெல்லாம் இடைவானத்திலே சுழல்கின்றது.
ஒரு க்ஷணம். பய வாதனை. வியாபாரக் கூட்டமும் மணலிலே அழிந்து போகிறது.
வாயு கொடியவன். அவன் ருத்ரன். அவனுடைய ஓசை அச்சந்தருவது.
அவனுடைய செயல்கள் கொடியன.
காற்றை வாழ்த்துகிறோம்.

காற்று

5.

வீமனும், அனுமானும் காற்றின் மக்கள் என்று புராணங்கள் கூறும்.
உயிருடையனவெல்லாம் காற்றின் மக்களே என்பது வேதம்.
உயிர் தான் காற்று.
உயிர் பொருள். காற்று அதன் செய்கை.
பூமித்தாய் உயிரோடிருக்கிறாள்.
அவளுடைய மூச்சே பூமியிலுள்ள காற்று.
காற்றே உயிர். அவன் உயிர்களை அழிப்பவன்.
காற்றே உயிர். எனவே உயிர்கள் அழிவதில்லை.
சிற்றுயிர் பேருயிரோடு சேர்கிறது.
மரணமில்லை.
அகிலமுழுதும் உயிர்நிலையே.
தோன்றுதல், வளர்தல், மாறுதல், மறைதல் — எல்லாம் உயிர்ச் செயல்.
உயிரை வாழ்த்துகின்றோம்,

காற்றே, வா.

மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா.

இலைகளின் மீதும், நீர்நிலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த பிராணரசத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.

காற்றே, வா.

எமது உயிர்நெருப்பை நீடித்து நின்று நல்லொளி தருமாறு நன்றாக வீசு.

சக்தி குறைந்து போய், அதனை அவித்து விடாதே.

பேய் போல வீசி, அதனை மடித்து விடாதே.

மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம் நின்று வீசிக்கொண்டிரு.

உனக்குப் பாட்டுக்கள் பாடுகிறோம்.

உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்.

உன்னை வழிபடுகின்றோம். ×

காற்று

7.

சிற்றெறும்பைப் பார்.

எத்தனை சிறியது!

அதற்குள்ளே கால், கை, வாய், வயிறு, எல்லா அவயவங்களும் கணக்காக வைத்திருக்கிறது

யார் வைத்தனர்? மஹாசக்தி.

அந்த உறுப்புக்களெல்லாம் நேராகவே தொழில் செய்கின்றன.

எறும்பு உண்ணுகின்றது. உறங்குகின்றது. மணம் செய்து கொள்கின்றது. குழந்தை பெறுகிறது; ஓடுகிறது. தேடுகிறது. போர் செய்கிறது. நாடு காக்கிறது.

இதற்கெல்லாம் காற்றுத்தான் ஆதாரம்.

மஹாசக்தி காற்றைக் கொண்டுதான் உயிர் விளையாட்டு விளையாடுகின்றாள்.

காற்றைப் பாடுகிறோம்.

அது அறிவிலே துணிவாக நிற்பது.

உள்ளத்திலே விருப்பு வெறுப்புக்களாவது.

உயிரிலே உயிர் தானாக நிற்பது.

உடம்பிலே வல்லமையாக நிற்குது.

வெளியரங்கத்திலே காதால் கேள்விகளை நாம் அறிவோம். நாம் அறிவிற்கின்.

காற்றுத் தேவன் வாயுக.

காற்று

௪.

மழைக்காலம்.

வாடை நேரம்.

வெளிக் காற்று வசிக்குது.

நோயாளி உடம்பை மேகக் கொணருகிறேன்.

பயணிகள்.

காற்றுக்கருதி உலகத்திலே இவைத்துவம் வாழ செய்யாது.

மாணவா காற்றேன்? அதற்கருதி வாழுந்தானோ?

காற்று நமக்கு வீசும்.

அது நமை தொலைக்க அறிதே.

வீசக் காற்று நிலையது.

கொடுங் காற்று மடிக்கு.

பனிக் காற்று நிற்கு.

ஊசக் காற்றை மண்ணுள் மனகலைக்க வடிவானையா.

அவர்க்கு காற்றுத் தெய்வத்தை நேரே வழிபடுகிறார்.

அதனால் காற்றுத் தேவன் கோவிலைத் தேடி அலைகிறார்கள்.

காற்றுத் தேவனை வணங்குவோம்.

அவன் வடிவு வழியிலே நோவு தீர்க்கலாகுது. காற்று விசேக்காகுது. அதனை

மனம்பிக்கா போவோமாகு. பசி பறந்தோக்காகுது. சாஸ்திர அசத்துமே

கேளாது.

காற்று வருகினம்.

இவன் வடிவழியை நான்கைத் தொழுது நாம் நீ தெளிந்து வாழ்வோம்.

அவன் வடிவழியே கேள்விகளும் புகழ்மொழிகளும் சொல்லுவோம்.

அவன் வழியிலே சிந்தும் நேர்ப்பு நிறுவனமாக்க கொள்ளுவோம்.

அவளே கை கொடுத்தாள் வந்த

அவள் கொடுக்க உயர்ந்த வந்த

அமுதமாக வந்த.

கதையை வழிபடுகின்றோமே.

அவள் சக்தி [illegible]. [illegible] [illegible].

அவளுக்கே [illegible] கூறுகின்றோமே.

அவள் வாழ்க.

காற்று

௧.

காற்றே, வா. மெதுவாக வா.

ஜன்னல் கதவை அடித்து உடைத்து விடாதே.

காயிதங்களை யெல்லாம் எடுத்து விசிறி எறியாதே.

அலமாரிப் புஸ்தகங்களைக் கீழே தள்ளிவிடாதே.

பார்த்தாயா! இதோ, தள்ளிவிட்டாய்.

புஸ்தகத்தின் ஏடுகளைக் கிழித்துவிட்டாய்.

மறுபடி பழைமையைக் கொண்டு வந்து சேர்க்கிறாய்.

வலிமையற்றதனைத் தொல்லைப்படுத்தி வேதனை பண்ணுகிறாய் நீ மகா மூடத்தனம்.

நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு, நொய்ந்த கூரை,

நொய்ந்த மரம், நொய்ந்த உடல், நொய்ந்த உயிர்,

நொய்ந்த உள்ளம் — இவற்றைக் காற்றுத் தேவன் புடைத்து நொறுக்கி விடுவான்.

சொன்னதைக் கேட்க மாட்டான்.

ஆதலால், மானிடரே வாருங்கள்.

வீடுகளைத் திண்மையுறக் கட்டுவோம்.

கதவுகளை வலிமையுறச் சேர்ப்போம்.

உடலை உறுதி கொள்ளப் பழகுவோம்.

உயிரை வலிமையுற நிறுத்துவோம்.

உள்ளத்தை உறுதி செய்வோம்.

இங்ஙனம் செய்தால் காற்று நமக்குத் தோழனாகி விடுவான்.

வையகத்தின் "உயிரை"யே காற்றென்கிறோம்.

அவனை எப்போதும் போற்றி வாழ்த்துதல் செய்கின்றோம்.

காற்று.

14

காற்றைப் புகழ நம்மால் முடியாது.

அவன் புகழ் தீராது.

அவனை ரிஷிகள் "ப்ரத்யக்ஷம் ப்ரம்ம" என்று போற்றுகிறார்கள்.

ப்ராணவாயுவைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காத்திடுக.
அபானனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க
வ்யானனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க

உதானனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க

ஸமானனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க.

காற்றின் செயல்களையெல்லாம் பரவுகின்றோம்.

உயிரை வணங்குகின்றோம்.

உயிர் வாழ்க.

காற்று.

15

உயிரே, நினது பெருமை யாருக்குத் தெரியும்?

நீ கண்கண்ட தெய்வம்.

எல்லா விதிகளும் நின்னால் அமைவன.

எல்லா விதிகளும் நின்னில் அழிவன.

உயிரே,

நீ காற்று, நீ தீ, நீ நிலம், நீ நீர், நீ வானம்.

தோன்றும் பொருள்களின் தோற்ற நெறி நீ.

மாறுவனவற்றை மாற்றுவிப்பது நின் தொழில்.

பறக்கின்ற பூச்சி, செல்லுகின்ற புலி, ஊர்கின்ற புழு, இந்தப் பூமியிலுள்ள
எண்ணற்ற உயிர்கள், எண்ணற்ற உலகங்களிலுள்ள எண்ணேயில்லாத
உயிர்த் தொகைகள் — இவையெல்லாம் நினது விளக்கம்.

காற்று மெலிய தீயை அவித்து விடுவான்.

வலிய தீயை வளர்ப்பான்.

அவன் தோழமை நன்று.

அவனை நித்தமும் வாழ்த்துகின்றோம்.

காற்று - 10.

மழை பெய்கிறது.

ஊர் முழுதும் ஈரமாகி விட்டது.

தமிழ் மக்கள் எருமைகளைப் போல, எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள், ஈரத்திலேயே உட்காருகிறார்கள், ஈரத்திலேயே நடக்கிறார்கள், ஈரத்திலேயே படுக்கிறார்கள். ஈரத்திலேயே சமையல்; ஈரத்திலேயே உணவு.

உலர்ந்த தமிழன் மருந்துக்குக் கூட அகப்பட மாட்டான்.

ஓயாமல் குளிர்ந்த காற்று வீசுகிறது.

தமிழ் மக்களிலே பலருக்கு ஜுரம் உண்டாகிறது.

நாள்தோறும் சிலர் இறந்து போகிறார்கள். மிஞ்சியவர்களும் "விதி" என்கிறார்கள்.

ஆமடா, விதிதான்.

அறிவில்லாதவர்களுக்கு இடைவிடாது எப்போதும் துன்பமுடைய விதி.

சாஸ்த்ரமில்லாத தேசத்திலே நோய்கள் மிகுவது விதி.

தமிழ் நாட்டிலே சாஸ்திரங்களில்லை. உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றையும் மறந்து விட்டுத் தமிழ் நாட்டுப் பார்ப்பார் பொய்க் கதைகள் பேசிக் கட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்.

குளிர்ந்த காற்றை விஷமென்று நினைக்கிறோம்?

அது அமிர்தம்; நீ ஈரமில்லாத வீட்டில் நல்ல உடைகளுடன் தேகபலத்துடன் பாயானேல்.

காற்று நன்று.

அதனை வழிபடுகின்றோம்.

காற்று.

காற்றென்ற சக்தியைக் காணுகிறோமே.

இறுக்குகிற சக்தி, புடைக்கிற சக்தி, மோதுகிற சக்தி, தொள்ளுவது, ஊதுவது.

சக்தியின் பலவடிவங்களிலே காற்றும் ஒன்று.

எனவே தெய்வங்களும் சக்தியின் கூறுகளேயாம்.

சக்தியின் கூட்டங்களே தெய்வங்களென்கிறோமே.

காற்று சக்தி போற்று.

அவனை வழிபடுகின்றோம்.

காற்று.

12

கடலை மரம் அசைக்கிறது.

காற்றின் அலைகளைக் கிளப்பிக் கொண்டு போகிறது.

அலைகள் போலவேறு, மேலே மரத்தைக் கிளப்பிச் செல்வதற்கே இடமே

பொருள் யாது? காற்று.

அன்று: அஃதன்று காற்று.

அது காற்றின் இடம். வாயு நிலயம்.

கண்ணுக்குத் தெரியாதபடி அத்தனை நுட்பமான ப்ருஷ் தூளைகளே (காற்றுக்-கும் போது) நிரம்பி வந்து சேருகின்றன.

அத்தூள்களைக் காற்றென்பது உலகவழக்கு.

அவை வாயுவல்ல. வாயு சூக்ஷ்மம் தேர்.

பஞ்சக் கண்டுமனே சூக்ஷ்மத்தில் நிற்கக் காண்கிறோம். நீரிலே சூக்ஷ்மத்தில் வாயுவைக் காண்கிறது.

நிலத்திலே சூக்ஷ்மத்தில் நிலையைக் கொள் பாடுகின்றது. அந்நிலையிலே சூக்ஷ்மத்தில், "வாயு" வாகின்றது.

இவ்வனவே, யாதும் பொருள்களைத் தாமும் "வாயு" நிலக்கே செல்லும் வந்து விடலாம்.

இது வாயு மயக்கித்தம்.

இதனை உணர்ந்து வரும் சக்தியை நாம் பற்றுத் தேவனென்று வணங்குகின்றோம்.

காக்கை பறந்து செல்லும் வழி காற்றன்று.

அது வழியை இயக்குபவன் காற்று.

அந்த அவ்வழியிலே தூண்டிச் செல்பவன் காற்று.

அவனை வணங்குகின்றோம்.

உயிரைச் சரணடைகின்றோம்.

காற்று

13.

அசைகின்ற இலையிலே உயிர் இருக்கிறதா? ஆம்.

இலைகிளை அடி-இவை உயிரால் அசைகின்றனவா? ஆம்.

மலையிலிருந்து போகும் கல் தரையிலே விழுகின்றது. அதன் சலனம் எதனால் நிகழ்வது? உயிருடைமையால்.

ஓடுகின்ற வாய்க்கால் எதன் நீரியல் வழு? உயிர் நியமம்.

ஐயைய இதோ காற்று ஊதத் தொடங்கிவிட்டதே! அதற்கு என்ன தேவைப்படு கிறது? உயிர் வேண்டுகிறது.

வண்டியை மாடு இழுத்துச் செல்கிறது. அங்கே மாட்டின் உயிர் வண்டியையும் இழுக்கிறது. வண்டி செல்லும்போது உயிருடனே தான் செல்லுகிறது.

காற்றே? உயிரல்லது.

நீர்வண்ணமே? உயிரல்லது, பெரிய உயிர்.

மக்களெல்லாம் உயிருடையன.

புயல் மழை இடைவிடாமல் மிக்க விசையுடன் அடிக்கின்றது.

அவள் நீரை உயிருடையவள், பூமித்தாய்.

எனவே, அவள் நிகழ்ச்சிகளுள்ள எல்லாமும் உயிர் விளையாட்டேயாம்.

அலை மோதும் அழுகிறது.

சந்திரன் சுழல்கின்றது. ஞாயிறு சுழல்கின்றது.

கோடி கோடி கோடி கோடி யோசனை தூரத்துக்கப்பாலும், அதற்கப்பாலும், அதற்கப் பாலும் சிதறிக் கிடக்கும் வானத்து மீன்களெல்லாம் ஓயாது சுழன்று கொண்டே இருக்கின்றன.

எனவே, இவ்வையகம் உயிருடையது.

மண்ணிலும், நீரிலும், காற்றிலும் நிரம்பிக் கிடக்கும் உயிர்களைக் கருதுகின்றேன்.

காற்றிலே ஒரு சதுர-அடி வரம்பில் லக்ஷக்கணக்கான சிறிய ஜந்துக்கள் நமது கண்ணுக்குத் தெரியாமல் வாழ்கின்றன.

ஒரு பெரிய ஜந்து; அதன் உடலுக்குள் பல சிறிய ஜந்துக்கள்; அவற்றுள் அவற்றினுஞ் சிறிய பல ஜந்துக்கள்; அவற்றுள் இன்னுஞ் சிறியவை— இங்ஙனம் இவ்வையக முழுதிலும் உயிர்களைப் பொதிந்து வைத்திருக்கிறது.

மலை— அதனினும் பெரிய மலை— அதனினும் பெரிது— அதனினும் பெரிது.....

அணு— அதனினும் சிறிய அணு— அதனினும் சிறிது— அதனினும் சிறிது............

இரு வழியிலும் முடிவில்லை. இரு புறத்திலும் அனந்தம்.

புலவர்களே, காலையில் எழுந்தவுடன் உயிர்களையெல்லாம் போற்றுவோம்.

"நமஸ்தே வாயோ த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி".

. . . .

கடல்

1

கடலே கொழுமையும் மதர்க்கின்றது.

விரைந்து சுழலும் பூமிப்பந்தில் பள்ளங்களிலே தேங்கியிருக்கும் கடல்நீர் அந்தச் சுழற்சியிலே

தெறிப்புண்டு கலைந்து திசைவெளியில் ஏன் சிதறிப்போய் விடவில்லை?

பராசக்தியின் ஆணை.

அவள் நமது தலைமீது கடல் கவிழ்ந்துவிடாதபடி காக்கின்றாள்.

அவள் திருநாமம் வாழ்க.

கடல் பெரிய ஏரி. விசாலமான குளம். பெருகியிருக்கிறது. இது நம் தலையிலே கவிழ்கிறதா?

அதுபற்றியே கடலும் கவிழவில்லை.

பராசக்தியின் ஆணை.

அவள் மண்ணிலே ஆகர்ஷண ~~சக்தியை~~த் திறமையை நிறுத்துகிறாள்.

அது பொருள்களை நிலைப்படுத்துகின்றது.

மலை நமது தலைமேலே புரளவில்லை.

கடல் நமது தலைமேலே கவிழவில்லை.

ஊர்கள் கலைந்து போகவில்லை.

உலகம் எல்லா வகையிலும் இயல் பெறுகின்றது.

இஃதெல்லாம் அவளுடைய திருவருள்

அவள் திருவருளை வாழ்த்துகின்றேம்.

கடல்

2

வெம்மை மிகுந்த பிரதேசங்களிலிருந்து வெம்மை குறைந்த பிரதேசங்களுக்குக் காற்று ஓடி வருகிறது.

அவ்வண்ணம் ஓடிவரும் போது காற்று மேகங்களையும் ஓட்டிக் கொண்டு வருகிறது.

இவ்வண்ணம் நமக்கு வரும் மழை கடற்பரப்புகளிலிருந்தே வருகின்றது.

காற்றே, உயிர்க்கடலிலிருந்து எங்களுக்கு நிறைய உயிர் மழை கொண்டு வா.

உனக்கு தூப தீபங் கொளுத்தி வைக்கிறேம்.

வருணா, இந்திரா, நீங்கள் வாழ்க.

இப்போது நல்ல மழை பெய்யும்படி அருள்புரிய வேண்டும்.

எங்களுடைய புலங்களெல்லாம் காய்ந்து போய்விட்டன.

சூட்டின் மிகுதியால், எங்கள் குழந்தைகளுக்கும், கன்றுகாலிகளுக்கும் நோய் வருகிறது. அதனை மாற்றிவிடல் வேண்டும்.

பகல் நேரங்களிலே அனல் பொறுக்க முடியவில்லை.

மனம் "ஹா ஹா" வென்று பறக்கிறது.

பறவைகளெல்லாம் வாட்டமெய்தி நிழலுள்ள பொந்துகளில் மறைந்து கிடக்கின்றன.

பல தினங்களாக, மாலைதோறும் மேகங்கள் வந்து கூடுகின்றன.

மேகமூட்டத்தால் காற்று நின்று போய் ஓலை கூட அசையாமல் புழுக்கம் கொடுமையாக இருக்கிறது.

சிறிது பொழுது கழித்தவுடன் பெரிய காற்றுக்கள் வந்து மேகங்களை அடித்துத் துரத்திக் கொண்டு போகின்றன. இப்படிப் பல நாட்களாக ஏமாந்து போகிறோம்.

இந்திரா, வருணா, அர்யமா, பகா, மித்திரா, உங்கள் திருவினைப் பாடுகிறோம். எங்கள் பாபமெல்லாம் தீர்ந்து உலகம் தழைக்குமாறு இன்பமழை பெய்தல் வேண்டும்.